සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதிப் பரீட்சை
**Year End Evaluation** - 2021


| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: **06** | විෂයය / பாடம் / Subject: கணிதம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: **I/II** | පැය / மணித்தியாலம் / Hours: **02** |

பெயர் : . ..................................................... **பகுதி I** சுட்டெண் : ........................

முக்கியம் :


- பகுதி **I** இற்கான விடைகளை இத் தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் 2 புள்ளிகள் வழங்கப்படும்.

1) கீழே தரப்பட்டுள்ள வட்டத்தின் மீதுள்ள புள்ளிகளை எழுதுக.




2) பெறுமானம் காண்க. : 456 × 7

3) கீழே எண் சட்டத்திலுள்ள தசம எண்ணை எழுதுக.





4) "நாப்பத்தி மூன்று மில்லியன் ஐம்பத்திநான்காயிரம்" என்பதை இலக்கத்தில் எழுதுக.

5) கீழே தரப்பட்டுள்ள அலகுகளில் நீளத்தை அளக்கப் பயன்படும் அலகுகளைத் தெரிந்தெடுத்து எழுதுக.

| |
|---|
| ml , cm , kg , $cm^2$ , m |

6)




I. தரப்பட்டுள்ள எண் கோட்டில் -2, +3 என்ற புள்ளிகளைக் குறிக்க.

II. இவ் எண்களை " > " எனும் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதுக.

7) நான்முகி ஒன்றின் விழிம்புகள், உச்சிகளின் எண்ணிக்கையை எழுதுக..

8) அக்கினி மூலைக்கு எதிரேயுள்ள திசையைக் குறிப்பிடுக.

9) பி.ப 1:45 இற்கு பாடசாலையிலிருந்து புறப்பட்ட சுரேஸ் 35 நிமிடங்களில் வீட்டிற்குச் சென்றடைந்தான். அவன் வீட்டிற்குச் சென்றடைந்த நேரத்தைக் காண்க.

10) அனைத்துமுண்ணிகள் இரண்டினை ஒரு தெரிதலுக்குள் உள்ளடக்குக.

11) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு எதிரே தெரிந்த கணியம், தெரியாக் கணியம் எனக் குறிப்பிடுக.

I. கிரிக்கட் குழுவிலுள்ள வீரர்களின் எண்ணிக்கை : ................................................

II. மதில் ஒன்றிலுள்ள செங்கற்களின் எண்ணிக்கை : ................................................

12) 2050 g ஐ கிலோக்கிராமில் தருக.

13) ஓர் எண்ணைக் கிட்டியப பத்திற்கு மட்டந்தட்டும் போது 50 பெறப்படுகின்றது. அவ் எண்ணாக அமையக் கூடிய மிகச் சிறிய மற்றும் மிகப் பெரிய எண்ணை எழுதுக.

14) (i) “ இரண்டு ஏழுக்கு ” என்ற விகிதத்தை சொற்களில் எழுதுக.

(ii) இவ் விகிதத்திற்கு சமவலு விகிதம் ஒன்று எழுதுக.

15) 17 ஐ வரவுக்குறி மூலம் குறித்துக் காட்டுக.

16) பக்க நீளம் 1 cm ஆகவுள்ள சதுரம் ஒன்றின் பரப்பளவு யாது?

1) 1cm 2) 2 cm 3) 1 $cm^2$ 4) $2cm^2$

17) எட்டுப் புத்தகங்களின் விலை ரூ 280 எனில், ஒரு புத்தகத்தின் விலையைக் காண்க.

18) 100 g பைக்கட்டில் 50 கடலைகள் காணப்பட்டது. 1 kg பைக்கட்டில் உள்ள கடலைகளின் எண்ணிக்கையை மதிப்பிடுக.

19) சுருக்குக.

$$\frac{5}{6} - \frac{2}{3}$$

20) ஒரு வகுப்பில் 20 பெண்பிள்ளைகளும், 25 ஆண் பிள்ளைகளும் உள்ளனர். ஆவ்வகுப்பிலுள்ள ஆண், பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையை எளிய விகிதமாகத் தருக.

பகுதி **II**

முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக. முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும், ஏனைய வினா ஒன்றிற்கு 11 புள்ளிகளும் வழங்கப்படும்.

---


01.

a. நீங்கள் வகுப்பறையில் கற்றுக் கொண்ட எண் கோலங்கள் என்ற பகுதியை நினைவு கூர்ந்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.


I. 5 இற்கும் 15 இற்கும் இடைப்பட்ட சேர்த்தி எண்களை எழுதுக.

II. இரட்டை முதன்மை எண் யாது?

III. படத்தில் காட்டப்பட்டுள்ள சதுர எண் எத்தனையாவது சதுர எண்? ஆதன் பெறுமதி யாது?



IV. நான்காவது முக்கோணி எண்ணை தரப்பட்டுள்ள படத்தில் வரைந்து காட்டுக.



...................................

b.

I. 18 = 1 x 18
= 2 x 9
= ....... X .......

மேலேயுள்ள இடைவெளியைப் பூரணப்படுத்துவதுடன் 18 இன் அனைத்துக் காரணிகளையும் எழுதுக.


II. 3 ஆனது 51 இன் காரணியா?

III. 100 இலும் குறைந்த 8 இன் மிகப்பெரிய மடங்கு யாது?

c. பெறுமானம் காண்க. 805 ÷ 23

---

02.



மேலே தரப்பட்டுள்ள செவ்வகமானது சிறிய சதுரங்களால் ஆக்கப்பட்டுள்ளது. சிறிய சதுரங்கள் ஒவ்வொன்றினதும் நீளம் 1 cm ஆகும்.


I. செவ்வகத்தின் நீளம், அகலம் நபெவற்றைக் காண்க.

II. செவ்வகத்தின் சுற்றளவைக் காண்க.

III. சிறிய சதுரம் ஒன்றின் பரப்பளவு யாது?

IV. செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.

03



a.

I. மேலே நிழற்றப்பட்டுள்ள பகுதியானது முழு உருவின் என்ன பின்னம்?

II. கூட்டுக. $\frac{1}{7}+\frac{2}{7}+\frac{3}{7}$

III. கழிக்க. $\frac{5}{8}-\frac{1}{4}$

IV. $\frac{1}{2},\frac{1}{3},\frac{1}{4}$ ஐ ஏறுவரிசையில் எழுதுக.

b.

I. 0.5 ........ 0.45 இடைவெளிக்குப் பொருத்தமான குறியீட்டை இடுக. (< , >).

II. பெறுமானம் காண்க : 2.5 + 3.42

---

04

a.

I. 2.5 ℓ ஐ மில்லிலீற்றரில் தருக.

II. கூட்டுக :

| l | ml |
|---|---|
| 5 | 375 |
| + 2 | 785 |
| | |

b. பக்க நீளம் 8 cm இலான இரண்டு சதுரமுகிகள் அவற்றின் முகங்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்துமாறு ஒட்டப்பட்டு ஒரு திண்மப் பொருள் உருவாக்கப்படுகின்றது.


I. அவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள திண்மத்தின் பெயரைக் குறிப்பிடுக.

II. இவ்வாறு உருவாக்கப்பட்ட திண்மத்தின் நீள, அகல, உயரங்களைக் குறிப்பிடுக.

III. இத் திண்மத்திற்குள்ள உச்சிகளின் எண்ணிக்கையைக் காண்க.

---

05 A , B , C , D என்னும் நான்கு பாடசாலைகளில் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கீழேயுள்ள பூரணப்படுத்தப்படாத பட வரைபு காட்டுகின்றது.



I. பாடசாலை A இல் 36 மாணவர்கள் உள்ளனர் எனில், குறிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.
II. பாடசாலை B இலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையானது பாடசாலை C இலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை விட எவ்வளவால் கூடியது?
III. பாடசாலை D இல் 39 மாணவர்கள் உள்ளனர் எனில், அம் மாணவர்களை தரப்பட்டுள்ள பட வரைபில் குறித்துக் காட்டுக.
IV. நான்கு பாடசாலைகளிலும் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.

---

06.

a.

I. சுனிலிடம் ரூ $x$ உம், நிமலிடம் ரூ 25 உம் உள்ளது. இருவரிடமும் உள்ள மொத்தப் பணத்தினை அட்சரகணிதக் கோவையில் தருக.
II. P = 7 எனில், 12 - p இன் பெறுமானத்தைக் காண்க.
III. x = 6 எனில், x + 5 இன் பெறுமானத்தைக் காண்க.

b.


I. 64 ஐ 4 இன் வலுவில் தருக.
II. $2^3 \times 3^2$ இன் பெறுமதியைக் காண்க.

---

07.

a.

I. நீர் விரும்பிய இரண்டு கோண வகைகளைக் குறிப்பிட்டு, அவற்றை வரைந்து காட்டுக.
II. கீழே தரப்பட்டுள்ள உருவில் இலக்கங்களால் குறிக்கப்பட்டுள்ள கோணங்களின் வகைகளைக் குறிப்பிடுக.




b. கீழே தரப்பட்டுள்ள உருவில் உள்ள வித்தியாசமான மூன்று தளவுருக்களை வரைந்து பெயரிடுக.

